**அசல் வழக்கு எண்.73/2017**

**தேதி: 06.02.2024.**

**பி.வா.சா.1:** இன்று அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**சாட்சி பெயர்**- (திரு. க. சுப்பிரமணி, த/பெ. கன்னி கவுண்டர்)

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் தொழில் ஏதுமில்லை, அரசியல் கட்சியில் மாவட்ட அளவில் பொறுப்பில் உள்ளேன். 1ம் வாதி சுரேஷ்பாபு என்பவரையும் 1ம் பிரதிவாதி பாலாஜி என்பவரையும் எனக்கு தெரியுமா என்றால் நிலம் வாங்கும் போது தெரியும். 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களின் முன்னிலையில் 10 ஏக்கர் 10 செண்ட் நிலம் கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான், என்னிடம் கிரையம் வாங்கியுள்ளார்கள்.

என்னிடமே அனைத்து நிலமும் கிரையம் வாங்கினார்களா என்றால் என்னிடம் 8 ஏக்கர் 90 செண்ட்டும் என் அக்காவிடம் 1 ஏக்கர் 8 செண்ட் நிலமும் கிரையம் பெற்றார்கள். கிரையத்திற்கு பிறகு வா.சா.ஆ.1 மற்றும் 2 சொத்து சம்மந்தமாக எனக்கு பவர் கொடுக்கப்பட்டது என்றால் பவர் பத்திரத்திற்கு முன்பு என்னிடமே கிரைய ஒப்பந்தம் 5 ஏக்கர் 5 செண்ட்க்கு 1ம் பிரதிவாதி போட்ட பிறகு 1ம் பிரதிவாதியும் 1ம் வாதியும் எனக்கு பவர் கொடுத்தார்கள்.

எப்போது எனக்கு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால்

19.12.2012 அன்று போடப்பட்டது. 19.11.2012 அன்று தான் பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் எனக்கும் 1ம் வாதிக்கும் ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தம் முன்னிலைக்கு எனக்கு கிரையம் கொடுக்கப்படவில்லை என்றாலும், அதற்கான வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் கிரையம் கொடுக்கவில்லை, வழக்கும் தாக்கல் செய்யவில்லை, அதற்கு பதில் தான் பவர் கொடுக்கப்பட்டது.

வா.சா.ஆ.3 முன்னிலைக்கு எனக்கு 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் பவர் கொடுத்தார்கள் என்றால் சரிதான். பவர் முன்னிலைக்கு சொத்தை விற்று கணக்கு கொடுக்க வேண்டும் என்பது தான் ஏற்பாடு என்றால் பவரில் பொதுவாக எழுதப்படும் வாக்கியங்கள் ஆகும். பவர் முன்னிலைக்கு தான் நான் பொது அதிகார முகவராக செயல்பட்டு தான் வா.சா.ஆ-4 முதல் வா.சா.ஆ-8 வரையிலான கிரையங்கள் கொடுக்கபட்டது என்றால் சரிதான். அந்த கிரையங்களுக்குண்டான பணம் கொடுக்கவில்லை என்று தான் இவ்வழக்கு என்றால் சரிதான்.

ஆனால் கிரைய ஒப்பந்தத்திலேயே ரூ.5,00,000/- செலுத்தி விட்ட பிறகு ரூ.10,65,000/-த்திற்கு சுரேஷ்பாபு மற்றும் சுரேஷ்பாபுவின் நண்பர்களான கருணாகரன் மற்றும் பாபுகுமார் ஆகியோர்களின் வங்கி கணக்கில் செலுத்திவிட்டேன். அவ்வாறு செலுத்தியத்திற்கு ஆதரமாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்ய உள்ளேன்.

**(சாட்சியின் வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional District Judge,
Fast Track Court, Arani.